# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1721/10 - 2011 අගෝස්තු 29 වැනි සඳුදා - 2011.08.29

*1721/10 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : 3/6/02/15.
காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பிலக்கம் : எல்டீ/05/2008/டபிள்யு.எஸ்./160.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை மாவட்டத்தில், கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவில், சூரியபுர கிராமத்தில் அமைந்துள்ளதும் நிலஅளவை நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட 2010.12.13 எனத் திகதியிடப்பட்ட எப்ரீபி இல. 2, மேலதிக இல. 167 ஆம் படிவத்தின் இல. 504 ஆம் இலக்கம் கொண்ட வரைபடத்தின் துண்டு இல. 9368 எனக் குறிப்பிடப்பட்டுள்ள 'சுண்டங்காடு அல்லது சூரியபுர' என்னும் காணியில் சுமார் 0.8085 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ்காணும் எல்லைகளில் அமைந்துள்ள காணித்துண்டு:

1. **துண்டு இல. 9368**

காணியின் பெயர் : சுண்டங்காடு அல்லது சூரியபுர ; உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : ஏ. ஆர். கே. பண்டா, எச். எம். பொடிமெனிக்கே மேற்பார்த்து, ஜயசேகர ஸ்டோர்ஸ், போட்டங்காடு சந்தி, கந்தளாய் மற்றும் இன்றும் சிலர் ; விஸ்தீரணம் : 0.8085 ஹெக்யடார்.

வடக்கு : துண்டு இல. 9369 மற்றும் துண்டு இல. 9369, வீதி (வீ.அ.அ.); கிழக்கு : காணித்துண்டு இல. 9363, வீதி (வீ.அ.அ.) மற்றும் துண்டு இல. 9369 (மதில்); தெற்கு : துண்டு இல. 9369 (மதில்); மேற்கு; துண்டு இல. 9369.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கந்தளாய் பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும் 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

யூ. ஜே. எம். எஸ். எஸ். பி. ஜயசிங்ஹ,
பிரதேச செயலாளர்,
கந்தளாய்.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கந்தளாய்,
2011.08.10.

09 - 391